பக்கங்கள்: 11

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 07 சனிக்கிழமை 24.09.2022 கதிர் 321


**இனி இது ரகசியம் அல்ல!**

சில்லுகள் இரண்டும் ஒரே சைக்கிளில், ஒன்றாக ஒழுங்காகப் பூட்டப்பட்டிருந்த காலத்தில், மெல்ல என்றாலும் நேர்த்தியாக தான் சைக்கிள் ஓடியது.

இப்போது ஒரு சில்லு அச்சை விட்டுக் கழன்று தன்பாட்டில் தனி வழி போக முற்பட்டதால் ☞2

# தமிழரின் பிரதான கோரிக்கையைக் கைவிட்டமை குறித்து ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் அதிருப்திக் கடிதம்!

## கூட்டாக ஒப்பமிட்டு ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்தனர்





ஜெனிவா,செப்.24

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக இம்முறை சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணையின் நகல் தொடர்பில் அதிருப்தி தெரிவித்து இலங்கை விடயத்தைக் கையாளும் பிரதான நாடுகளின் வெளிநாட்டு அமைச்சர்களுக்கும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் வதிவிடப் பிரதிநிதிகளுக்கும் ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டுக் கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களான மாவை. சேனாதிராஜா(இலங்கைத் தமிழரசுக் கட்சி), நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் ☞2

# தேசிய சபையில் இணையோம்!

## கூட்டமைப்புத் திட்டவட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24

தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினையாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்களில் சிலவற்றையாவது தீர்க்காத வரையில் தமிழர் தரப்பு தேசிய சபையில் இணையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதமர் தினேஷ் குணவர்த்னவிடம் தெரிவித்தனர். ☞2



## அமையும் தேசிய சபையில் இடம் பெறும் எம்.பிக்கள்!

### 27 பேரின் பெயர்கள் நேற்று அறிவிப்பு



அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களை உள்ளடக்கிய தேசிய சபைக்காக தற்போது பெயர்கள் ☞2

## தூதர் மிலிந்த மொறகொட அஜித் டோவலுடன் சந்திப்பு



இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொறகொட இந்தியத்தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவலை புதுடில்லியில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார். ☞10



## 42 கிலோ கஞ்சா சக்கோட்டையில் கரை ஒத்துங்கியது

பருத்தித்துறை - சக்கோட்டை கடற்கரைப்பகுதியில் கரையொதுங்கிய நிலையில் 42 கிலோ கிராம் கேரள ☞2

## தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலித்து நல்லூரில் நாளை உண்ணாநோன்பு!

### நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அழைப்பு



அனைத்து தமிழ் உறவுகளும் தியாக தீபம் திலீபனுக்கு நாளை ஞாயிற்றுக் கிழமை உண்ணாநோன்பு இருந்து வீர வணக்கத்தையும் அஞ்சலியையும் செலுத்த வேண்டும் என தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

தியாகதீபம் திலீபனின் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்புக்கும் அரசியல் கட்சிகளுடைய தலைவர்கள் மற்றும் ☞10

## ஹெரோயினுடன் மாணவன் கைது

ஹெரோயினுடன் பாடசாலை மாணவன் ஒருவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

யாழ். நகர்பகுதியில் அமைந்துள்ள ஆண்கள் பாடசாலை மாணவன் ஒருவனே யாழ்ப்பாண பொலிஸாரினால் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளான். கைது செய்யப்பட்ட மாணவனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## அமெ. ஜனாதிபதியை சந்தித்தார் அலி சப்றி



வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் முதல் பெண்மணி கலாநிதி ஜில் பைடன் ஆகியோரை சந்தித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 77ஆவது ☞2

## நாணய நிதியத்தின் கடனுதவி ஆண்டு இறுதிக்குள் கிட்டுமாம்

இந்த வருட இறுதிக்குள் சர்வதேச நாணயநிதியத்தின் ஊடாக 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுக்கான அனுமதியை இலங்கை பெற்றுக்கொள்ள முடியும் என இலங்கை மத்திய வங்கி எதிர்பார்ப்பதாக ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

முதலீட்டாளர்களுடன் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலில் ☞2

## இந்தியா செல்ல முயன்ற 12 பேரில் 5 பெரியவர்களுக்கு விளக்கமறியல்!

### 7 சிறுவர்கள் உறவினர்களிடம் ஒப்படைப்பு

மன்னார் தாழ்வுபாடு கடல் பகுதி ஊடாக இந்தியாவிற்குச் செல்ல முயன்ற நிலையில் கைது செய்யப்பட்ட 12 நபர்களில் 5 பேரை விளக்கமறியலில் வைக்க மன்னார் நீதிவான் உத்தரவிட்டமையோட்ய், ஏனைய 7 சிறுவர்களையும் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

மன்னார் தாழ்வுபாடு கடற்பரப்பினூடாக சட்டவிரோதமாக படகு மூலம் இந்தியா செல்ல முயன்ற ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு சில்லுகளுக்கும் இடையிலான முறுகலில் சைக்கிள் சவாரி தடுமாறிக் குழம்பி விட்டது.

தியாகி திலீபனின் நினைவேந்தலை ஒட்டி திலீபனின் தூபிக்குப் பக்கத்தில் நின்றவாறு இரண்டு தரப்புக்களினதும் சண்டியர்கள் பண்ணிய சண்டப் பிரசண்டம் சகிக்க முடியாதது. அலப்பறை பொறுக்க முடியாதது.

தாங்க முடியாமல் பொங்கி எழுந்தார் முன்னாள் மூத்த போராளி காக்கா அண்ணன்.

சைக்கிள் சில்லில் ஒன்றின் பக்கம் அவர் என்று கருதிய மற்ற தரப்பு அவரையும் வறுத்தெடுக்கத் தவறவில்லை.

இந்தப் பக்கம் காக்கா என்றால், மற்றப் பக்கம் பொன் மாஸ்டரைக் களமிறக்கியது மற்றைய சில்லு.

இந்த இரண்டு முன்னாள் போராளிகள் குறித்தும் நல்லது, கெட்டது பலதும் பத்தும் அறிந்தவன் நான். பல கோணல் மாணல்கள் எனக்கு தெரியும். அவை போராட்ட கால அனுபவங்களும், அனுபவப் பகிர்வுகளும் என்பதால் விட்டுவிடுகிறேன்.

ஆனால் காக்கா அண்ணரை காக்கை வன்னியனுடன் சமப்படுத்துவது போல ஒரு கதை வந்திருப்பது தாங்க முடியாத ஒன்று.

நேற்று வவுனியாவில் பத்திரிகையாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்குத் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அளித்த பதில் இப்படி அமைந்தது. அவர் யாரை யாருடன் ஒப்பிடுகின்றார் என்பதை வாசகர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

“எமது தேசவிடுதலைக்காகப் போராடிய போராளிகளை நாம் ’முன்னாள் போராளிகள்’ எனக்கருதவில்லை. தமது கொள்கைக்காக நேர்மையாக பயணிக்கும் அவர்கள் போராளிகள்தான். அவர்கள் எம் பெருமதிப்புக்கு உரியவர்கள். அவர்களது அர்ப்பணிப்பையும், தியாகத்தை நாம் உட்பட எவரும் கொச்சைப்படுத்த முடியாது. அந்தப் போராளிகளுக்கான மதிப்பைக் கொடுக்க தயாரில்லாத எவரும் எம் அமைப்பில் இருக்கவே முடியாது. அவர்கள்(அந்தப் போராளிகள்) தமது வாழ்வையே, வாழ்க்கை முறையையே எமக்கு உதாரணமாகத் தந்து வாழ்ந்து காட்டியவர்கள். அவர்களை போற்றுவதும், மக்களுக்காக தம்மை அர்ப்பணித்த அவர்களை பராமரிப்பதும் எமது தேசத்தின் தலையாய கடமை என்றே நான் கருதுகின்றேன்.

“ஆனால், எத்தனையோ உயிர் அர்ப்பணிப்புகளால் கட்டியெழுப்பப்பட்ட எமது தேசத்தின் கொள்கையை கைவிட்ட எவரும் தம்மை ’முன்னாள் போராளி’ எனும் அடையாளத்தை வைத்து கொண்டு மக்களை பிழையாக வழிநடத்த முடியாது. அப்படியாயின் கருணா கூட தன்னை ‘முன்னாள் போராளி’ என அழைத்து அந்த அடையாளத்தைக் காட்டி எம்மை பிழையாக வழிநடத்த முடியும். அதற்கு மக்கள் அனுமதிக்கக் கூடாது” - என்றார்.

இதை வாசித்ததும் எனக்கும் கூட சற்று எரிச்சலாகத்தான் இருந்தது. என்ன செய்வது? நமது போராட்டம் தமிழினத்தை இப்படியான கைகளில் விட்டுச் சென்றிருக்கிறது. அவ்வளவுதான்.

- மின்னல் -

## தேசிய சபையில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய சபை அமைப்பது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தனாவிற்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளிற்கும் இடையில் நேற்றைய தினம் நாடாளுமன்றில் சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே பிரதமரிடம் வன்னி தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் இதனைச் சுட்டிக் காட்டினார்.

இந்த சந்திப்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தரப்பில் இ.சாள்ஸ் நிர்மலநாதன், கலையரசன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தம் கருணாகரன் (ஜனா), த.சித்தார்த்தன் ஆகியோருடன் நீதியரசர்ர சி.வி.விக்னேஸ்வரனும் பங்கு கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பில் தேசிய சபையில் இணைந்து செயல்பட வேண்டும் என பிரதமர் கோரிக்கை விடுத்தபோது, சாள்ஸ் நிர்மலநாதன் காட்டமாகப் பதிலளித்தார் எனத் தெரியவருகிறது.

“கல்முனை வடக்குப் பிரதேச செயலகத் துக்கு ஒரு கணக்காளரை நியமிக்க அலி சப்றியின் சம்மதம் பெற அரசு காத்திருக்கின்றது. முல்லைத்தீவில் குருந்தூர் மலை, வவுனியா வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர், கோணேஸ்வரம் கோயில்கள் பறிபோகின்றன. அத்தகைய பிரச்சினைகளுக்கு முடிவு ஏற்படவில்லை.

“அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை. நிலவிடுவிப்பு என்ன நிலைமை என்றே தெரியவில்லை. இந்த லட்சணத்தில் எதன் அடிப்படையில் நாம் தேசிய சபையில் இணைவது?

“மறுபுறத்தே வடக்கு மாகாண பிரதம செயலாளர் சிங்கள இணத்தைச் சேர்ந்தவர். வடக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர் நியமனம் பெற்றுள்ளார். இந்தச் சமயம் அரசின் எந்த நிர்வாகத்தில் நாம் பங்குகொண்டாலும் இவற்றையெல்லாம் நாமும் ஏற்றோம் என்றே அர்த்தம் கொள்ளப்படும். எனவே மேற்சொன்ன விடயங்களை நினைவேற்றி விட்டு வாருங்கள். அதன் பின்பு இவை தொடர்பில் பேசலாம்.” - என்ற சாரப்பட. கூட்டமைப்பின் சாள்ஸ் நிர்மலநாதன் குறிப்பிட்டார்.

இதேநேரம் மாகாண ரீதியில் சபை அமைக்கப்பட்டால் அதில் இணைவது தொடர்பில் பரிசீலிக்கலாம் எனவும், அத்தோடு சுரேஸ் பிறேமச்சந்திரன் மற்றும் சிறீக்காந்தா போன்றோரையும் இணைத்து செயல்படுமாறும் நீதியரசர் விக்னேஸ்வரன் கோரினார்.

ஆனால் தேசிய சபையில் எம்.பிக் களுக்குத்தான் இடம் என்றார் பிரதமர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் குறுக்கிட்டு மாகாண ரீதியில் சபை அமைத்தாலும் கூட்டமைப்பு அதில் பங்கேற்க மாட்டாது எனக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

## தமிழரின் பிரதான .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(தமிழ் மக்கள் கூட்டணி), செல்வம் அடைக்கலநாதன்(ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன்(புளொட்), சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), ந. சிறீகாந்தா (தமிழ்த் தேசியக்கட்சி) ஆகியோரே ஒன்றிணைந்து ஒப்பமிட்டு இக்கடிதத்தை அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கை விடயத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்த் தரப்பினரின் கோரிக்கைகள் முக்கியமாக பிரேரணையில் உள்வாங்கப்பட வேண்டும் என் அக்கடிதத்தில் தமிழ் தேசியக் கட்சித் தலைவர்கள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் பிரதான அங்கத்துவ நாடுகளிடம் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர் என மேற்படி ஆறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளர் குருசாமி சுரேந்திரன் ஜெனிவாவிலிருந்து தெரிவித்தார். அந்தக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:-

“பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பிலிருந்து கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை தங்களுக்கு ஏற்கனவே நாங்கள் அனுப்பி வைத்திருந்த போதிலும் வெளிவந்திருக்கும் மாதிரிப் பிரேரணையில் எம்மால் முன்வைக்கப்பட்ட முக்கிய கோரிக்கையும், ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகர் அறிக்கையில் பரிந்துரைத்ததுமான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு குற்றவாளிகளைப் பாரப்படுத்த வேண்டுமென்ற விடயம் உதாசீனம் செய்யப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டுகிறோம்.

“அழிவுகளுக்கான அனுபவத்தை கொண்டவர்கள் நாம். சர்வதேச சமூகத்தின் செயலற்ற நிலையினால் நாம் பாரிய விலை கொடுத்துள்ளோம். பல்லாயிரக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டும், வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

“இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளும் முகமாக மனித உரிமைகள் கவுன்ஸிலில் முன்வைக்கப்படும் பிரேரணையில் நமது கோரிக்கைகள் உள்ளடக்கப்படாமல் இருப்பதை அவதானிக்கிறோம்.

“இந்த இக்கட்டான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட தரப்பினர் கோரிக்கைகளை மாத்திரமல்லாமல் ஐ.நா. உயரதிகாரிகளின் பரிந்துரைகளையும் உதாசீனம் செய்து சமர்ப்பிக்கப்பட இருக்கும் பிரேரணையில், சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்திற்குக் குற்றவாளிகளைப் பாரப்படுத்தும் எமது பிரதான கோரிக்கையை உள்ளடக்குமாறு மீண்டும் வலியுறுத்துகிறோம். - என்று குறிப்பிட்டுள்ளனர்.

## அமையும் தேசிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியலை சபாநாயகர் நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

சபாநாயகர் தலைவராக இருந்த போதிலும், பிரதமர், நாடாளுமன்றின் சபைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், ஆளுங் கட்சியின் பிரதான அமைப்பாளர், எதிர் கட்சியின் பிரதான அமைப்பாளர் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களினால் தீர்மானிக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் ஒன்பதாவது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 35 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மிகாமல் தேசிய சபை இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள தேசிய சபையில் உள்வாங்கப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

டக்ளஸ் தேவானந்தா, நசீர் அஹமட், டிரான் அலஸ், சிசிர ஜெயக்கொடி, சிவநேசதுரை சந்திரகாந்தன், ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, ரவூப்ஹக்கீம், பவித்ராதேவி வன்னியாராச்சி, வஜிர அபேவர்தன, ஏ. எல்.எம். அதாவுல்லா, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, ரிசாத்பதியுதீன், விமல்வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, பழனி திகாம்பரம், மனோ கணேசன், உதய கம்மன்பில, ரோஹித அபேகுணவர்தன, நாமல் ராஜபக்ஷ, ஜீவன் தொண்டமான், ஜி.ஜி.பொன்னம்பலம், வணக்கத்திற்குரிய அதுரலியே ரத்ன தேரர், அசங்க நவரத்ன, அலி சப்ரி, சி.வி.விக்னேஸ்வரன், வீரசுமண வீரசிங்க, சாகர காரியவசம்.

## 42 கிலோ கஞ்சா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இராணுவத்தினரால் இந்தக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவை மதுவரித் திணைக்களத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றை மதுவரித் திணைக்களத்தினர் பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## அமெ. ஜனாதிபதியை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமர்வின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இரவு விருந்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 77 ஆவது அமர்வில், இலங்கையின் அறிக்கையை வெளிவிவகார அமைச்சர் அலி சப்றி இன்று முன்வைக்க உள்ளார்.

## நாணய நிதியத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகள் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

## இந்தியா செல்ல .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுவர்கள் உட்பட 12 பேர் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டு பின்னர் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அந்த பன்னிருவரில் இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆண்கள், 3 பெண்கள் மற்றும் 7 சிறுவர்கள் அடங்குகின்றனர்.

அவர்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல் தீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் என விசாரணையின் மூலம் தெரிய வருகிறது.

12 பேரும் நேற்று மாலை மன்னார் பொலிஸாரினால் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் 2 ஆண்கள் மற்றும் 3 பெண்கள் உள்ளடங்கலாக 5 பேரையும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

ஏனைய 7 சிறுவர்களையும் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டார். இந்த நிலையில் நேற்று சிறுவர்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.






# கே.பியின் கட்டுப்பாட்டில் இருந்த கப்பல்கள், பணம், தங்கம் எங்கே?

## கேள்வி எழுப்புகின்றது ஜே.வி.பி.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச பொறுப்பாளரான கே.பியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கப்பல்கள், நிதி மற்றும் தங்கம் என்பவற்றுக்கு என்ன நடந்தது என்று தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பி. அணியின்) நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தலைவருமான நாமல் கருணாரத்ன கேள்வி எழுப்பியுள்ளார்.

கொத்மலை தேர்தல் தொகுதியில், தேசிய மக்கள் சக்திக்கான தொகுதி சபை அமைக்கும் நிகழ்வு கொத்மலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அர்ஜுன் மகேந்திரன் என்பவர், சாதாரண அரச அதிகாரி. அவர் நாட்டை விட்டு தப்பியோடினார்.

கே.பி எனப்படும் குமரன் பத்மநாதன், புலிகள் அமைப்பில் பலம்பொருந்திய தலைவராக இருந்தார்.

பிரபாகரனுக்கு அடுத்தப்படியாக அவரே தலைவர். இப்படிபட்ட கே.பி உலக நாடுகளை சுற்றி வலம் வருகையில் கைது செய்யப்பட்டு, நாட்டுக்கு அழைத்து வரப்பட்டார்.

கே.பியை இவ்வாறு அழைத்துவர முடியுமென்றால், அர்ஜுன் மகேந்திரனை ஏன் கைது செய்ய முடியாமல் உள்ளது?

மகேந்திரன், ரணிலின் நண்பர் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். அதேபோல கே.பியின் கட்டளையை ஏற்று செயற்பட்ட இளைஞர்கள் சிறைகளில் உள்ளனர்.

கே.பியோ வெளியில் சுகபோகம் அனுபவிக்கின்றார்.




கே.பியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த கப்பல்கள், பணம், தங்கத்துக்கு என்ன நடந்தது, மர்மமாகவே உள்ளது. எமது ஆட்சியில் இவை குறித்து விசாரணை நடத்தப்படும்.

உணவுப்பொருழ்ல்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன.

ஆனால் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கே நெல் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இவ்வாறு குறைந்த விலையில் நெல்லை வாங்கி விட்டு, அதிக விலைக்கு அரிசி விற்கப்படுகின்றது. – எனவும் மேலும் தெரிவித்தார் .



# ஜனாதிபதி மாளிகை, செயலகம், அலரிமாளிகை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனம்!

கொழும்பில் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரி மாளிகை மற்றும் பிரதமரின் செயலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிரதேசங்களை விசேட அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி அதி விசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் அதிபர் ரணில் விக்ரமசிங்க நேற்று முன்தினம் கையெழுத்திட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் யுத்தம் நடைபற்ற காலத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக நாட்டின் பல இடங்கள் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தன. அது பொதுவான அனுபவமாக இருந்தது. போர் முடிவுக்கு வந்த பின்னர் அனைத்து பாதுகாப்பு வலயங்களும் நீக்கப்பட்டன.

இந்த நிலையில் தற்போது அதிபர் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களை பிரகடனப்படுத்தியுள்ளார்.

முன்னாள் அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு எதிராக வெடித்த மக்கள் புரட்சியின் போது அதிபர் மாளிகை, அதிபர் செயலகம் மற்றும் அலரி மாளிகை உள்ளிட்ட அரச கட்டடங்கள் போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன் எதிரொலியே தற்போது குறித்த பிரதேசங்கள் விசேட அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப் படுத்த காரணம் என தெரிவிக்கப்படுகின்றது



காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி. யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மூஞ்சூறு தூக்கிய விளக்கமாறு

'மூஞ்சூறு தான் போகக் காணோம், அதற்குள் விளக்கு மாற்றையும் தூக்கிச்சிதாம்' – என்ற நாட்டார் பேச்சு மொழி நம் மத்தியில் உண்டு.

தானே வெளியே (தப்பிப்) போக வழி காணாத மூஞ்சூறு, அதற்கிடையில் தன்னைவிடப் பெரிய விளக்குமாற்றையும் தூக்கிக் கொண்டு போக முயன்றமையைக் குறிப்பிடும் வாக்கியம் இது.

இலங்கையில் யுத்த காலத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பில் கடந்த 13 வருடங்களாக நீதியை நிலை நிறுத்தப் பண்ணி, உண்மைகளைக் கண்டறிந்து, பொறுப்புக் கூறலை நடைமுறைப்படுத்த வைப்பதற்கு எதுவும் செய்ய வக்கில்லாத சர்வதேச சமூகம் – ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் – அதற்கிடையில் இலங்கை தொடர்பில் மேலும் பல புதிய குற்றச்சாட்டுகளை அடுக்கி, அவற்றுக்கும் நீதி தேடவும் பொறுப்புக் கூறலை நிலை நாட்டவும், உண்மைகளைக் கண்டறியவும் போவது போல பம்மாத்துக் காட்டுகின்றது.

இலங்கை தொடர்பில் இணை அனுசரணை நாடுகளின் உத்தேசப் பிரேரணையின் வரைவை நோக்கும் போது, மூஞ்சூறு விளக்குமாற்றைத் தூக்கிய கதை கனகச்சிதமாகப் பொருந்துவதாகவே படுகிறது.

யுத்த கால மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், யுத்தக் குற்றங்கள் போன்றவை தொடர்பில் இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, காலத்தை இழுத்தடித்து, மேலும் மேலும் கால அவகாசங்களைக் குற்றம் சுமத்தப்பட்ட தரப்புக்கு வழங்கியமையைத் தவிர, கடந்த 13 ஆண்டுகளாக வேறு உருப்படியாக எதையும் சர்வதேச சமூகம் சாதித்ததாக இல்லை.

இதற்கிடையில், இப்போது பொருளாதார குற்றங்கள் என்ற புதிய கதைகளையும் – அதுவும் நகல் பிரேரணையின் செயற்பாட்டுப் பந்தியில் (Operational Para) சொருகி இருக்கின்றன இணை அனுசரணை நாடுகள். இது விடயத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் உள்ளன.

ஒன்று – இந்தப் பொருளாதாரக் குற்றங்கள் இலங்கையில் மோசமாக இழைக்கப்பட்டன என்றாலும், இப்போது உலகில் உள்ள 195 நாடுகள் பலவற்றின் ஆட்சி பீடங்கள் கூட இத்தகைய பொருளாதாரக் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டவைதான்.

இலங்கை ஆட்சிப் பீடத்தில் இருந்த ஆட்சியாளர்கள், அதிகாரிகள் அதற்காக சர்வதேச விசாரணைகளை எதிர்நோக்கித் தண்டிக்கப்பட வழி ஏற்படுமானால், அந்தத் தொப்பி தங்கள் தலைகள் மீதும் என்றோ ஒரு நாள் விழும் பேராபத்து உள்ளது என்ற யதார்த்தத்தைப் புரிந்த பல நாடுகள், அந்தக் காரணத்துக்காக இந்தப் பிரேரணைக்கு கால் தடுக்குப் போட, அதனோடு சேர்ந்து தமக்கான மனித உரிமை நீதியை எதிர்பார்த்து இருக்கும் தமிழரின் நம்பிக்கையும் தடுமாறி விழ வேண்டி நேரிடும்.

அடுத்தது – இந்தப் பொருளாதாரக் குற்றங்கள் என்ற பொதுமைப்படுத்தப்பட்ட விடயத்தை விசாரிப்பதற்கான பொறி முறை யாது, உள்நாட்டு பொறிமுறையா, வெளிநாட்டு நிபுணர்கள், பொருளாதார நிபுணர்கள் சம்பந்தப்பட்ட ஆயமா என்ற சர்ச்சைகள் எல்லாம் கிளம்பும். உள்நாட்டு தரப்புகள், வெளிநாட்டு நிதி பங்களிப்புடன் சம்பந்தப்பட்ட கையாளுகையும் இந்தப் பொருளாதாரக் குற்றங்களில் முக்கிய பங்களிப்பதால், வெளிநாட்டு நிபுணத்துவத்தின் ஈடுபாடு இந்த விசாரணைக்குத் தவிர்க்க முடியாததாக இருக்கும். அதனையும் இறைமை என்ற சொல்லாடலைக் காட்டி, கொழும்பு தடுக்க முற்பட, தமிழர்களின் நலனும் அந்தப் பிரேரணையின் வீழ்ச்சியில் அடிபட்டு போகும் என்பது திண்ணம்.

தேவையில்லாமல் இந்தப் பொருளாதாரக் குற்றம் என்ற விளக்குமாற்றையும் தூக்கி, தமிழர்களை நட்டாற்றில் கைவிடப் போகின்றது சர்வதேச சமூகம். அதுதான் இதன் முடிவாகும் போல.

# கட்சித் தவிசாளர் பதவியிலிருந்து பீரிஸ் விரைவில் நீக்கப்படுவாராம்!

## விமலவீர திஸாநாயக்க எம்.பி. தெரிவிப்பு



விரைவில் நடைபெறும் பொதுஜன பெரமுன கட்சியின் அடுத்த சம்மேளனத்தின் போது புதிய தவிசாளர் நியமிக்கப்படுவார். ஆகவே அப்பதவியில் இருந்து பீரிஸ் நீக்கப்படுவார். தற்போது எமது கட்சி சூறாவளியில் சிக்கியுள்ளது. ஆனால் வீழ்ந்துவிடவில்லை. நிச்சயம் மீண்டெழும் என நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பதவியில் இருந்தும், உறுப்புரிமையில் இருந்தும் முடிந்தால் தன்னை நீக்கி காட்டுமாறு பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் நேற்று முன்தினம் சவால் விடுத்தார். டலஸ் அழகப்பெருமவும் இந்த சவாலை விடுத்திருந்தார்.

டலஸ் அழகப்பெரும தலைமையிலான அணி விடுத்துள்ள சவாலையடுத்தே இவ்வாறான அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்த கட்சி சம்மேளனத்தின்போது பதவிகள் பறிக்கப்படும் எனவும் பொதுஜன பெரமுன, சூளுரைத்துள்ளது.

மொட்டு கட்சியின் ஊடக சந்திப்பு நேற்று கட்சி தலைமையகத்தில் நடைபெற்றபோது, இது தொடர்பில் கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க –

உடனடியாக நாம் பதவி நீக்க மாட்டோம். அவசரப்படவும் மாட்டோம். சுதந்திரக்கட்சியில் இருந்துகொண்டே மைத்திரியை விமர்சித்தோம். ஆனாலும் அவர் அவசரப்படவில்லை.

இருப்பினும் அடுத்த சம்மேளத்தில் புதிய தவிசாளரை நாம் நியமிப்போம் எனவும் தெரிவித்துள்ளார்.

# கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உறுப்பினர் முல்லைத்தீவுப் பொலிஸாரால் நேற்றுக் கைது

## குருந்தூர்மலை போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக




முல்லைத்தீவு கரை துறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர சின்னராசா லோகேஸ்வரன் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருந்தூர் மலையில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற போராட்டம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக அழைக்கப்பட்ட நிலையிலேயே சின்னராசா லோகேஸ்வரன் முல்லைத்தீவு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு – தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையைச் சூழவுள்ள தமிழ் மக்களுக்குரிய 632 ஏக்கர் பூர்வீக காணிகளை தொல்லியல் திணைக்களம் அபகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றமை மற்றும் நீதிமன்றக் கட்டளையைப் புறந்தள்ளி பௌத்த கட்டுமானம் மேற்கொள்ளப்படுகின்றமை என்பவற்றைக் கண்டித்துதண்ணிமுறிப்புமற்றும்குமுழமுனை பகுதி மக்களால் கடந்த 21ஆம் திகதி குருந்தூர்மலையில் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டம் மக்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், சிவில்சமூகப் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் மக்களோடு கலந்துகொண்ட வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும், கரைதுறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் முன்னாள் தலைவரும், சமூகசெயற்பாட்டாளருமான இரத்தினராசா மயூரன் உள்ளிட்ட பலருக்கு எதிராக தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் செய்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொள்வதற்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் வருமாறு அழைப்பு விடுத்திருந்தனர்.

அவ்வாறு விசாரணைக்கு சென்றிருந்த நிலையில், அன்றைய தினம் இரவே காவல்துறையினரால் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அடுத்த நாள் அவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர் .

அதேபோல் இப்போது கைது செய்யப்பட்டுள்ள சின்னராசா லோகேஸ்வரனும் பிணையில் விடுவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

# கல்லடிக் கடற்கரையில் ஆண் ஒருவரின் சடலம்


மட்டக்களப்பு, செப். 24

மட்டக்களப்பு காத்தான்குடி காவல்துறை பிரிவிலுள்ள கல்லடி கடற்கரையில் உயிரிழந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் ஒன்றைப் பொலிஸார் நேற்று முன்தினம் இரவுமீட்டுள்ளனர்.

நாவற்குடாவைச் சேர்ந்த 45 வயதுடைய பாக்கியரெட்ணம் ரஜேந்திரன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடற்கரையில் சடலம் ஒன்று இருப்பதாக மீனவர்கள் பொலிஸாருக்குத் தெரிவித்தமையையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்று சடலத்தை மீட்டுப் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.



# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# சிறுபான்மையினரின் உரிமைகள் குறித்து பாகிஸ்தான் பேசுவது நகைப்புக்குரியது!

## ஐ.நா.வின் உயர்மட்டக் கூட்டத்தில் இந்தியப் பிரதிநிதி காட்டம்



Screengrab from video tweeted by @IndiaUNNewYork

'சிறுபான்மையினரின் உரிமைகளை கடுமையாக மீறும்' இஸ்லாமாபாத், சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றி பேசுவது நகைப்புக்குரியது என்று கூறும் ஐ.நா.பொருளாதார,சமூக அமைப்புக்கான இந்தியாவின் இணைச் செயலாளர் ஸ்ரீனிவாஸ் கோட்ரு, சிறுபான்மையினர் மற்றும் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ சர்தாரியின் கருத்து, இஸ்லாமாபாத் சிறுபான்மையினரின் உரிமைகளை கடுமையாக மீறும் செயற்பாட்டுக்கு முரண்பாடாக உள்ளது என்று புதன்கிழமை கடுமையாக சாடியுள்ளார்.

சிறுபான்மையினரின் உரிமைகள் தொடர்பான ஐ.நா.வின் உயர்மட்டக் கூட்டத்தில் பேசிய இந்திய இராஜதந்திரி பாகிஸ்தான் சிறுபான்மையினரின் உரிமைகள் பற்றி பேசுவது நகைப்புக்குரியது. ஒரு நாடு தனது அதே வெட்கக்கேடான சாதனையை மறைக்க தனது தரவுகளை வெளியிடுவதை கூட நிறுத்தியுள்ளது. அவர்கள் இந்த வியத்தைக் கூட கொண்டு வந்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. உலகம் இதுவரை என்றுமே கண்டிராத சிறுபான்மையினரின் உரிமைகளை கடுமையாக மீறும் நீண்ட வரலாற்றைக. அது கொண்டுள்ளது. என்றார்.

சீக்கியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் அகமதியர்களின் உரிமைகளை பாகிஸ்தான் தொடர்ந்து கடுமையாக மீறுகிறது என்று கோட்ரு கூறினார். பாகிஸ்தானில், ஆயிரம் பெண்கள் மற்றும் குழந்தைகள் – குறிப்பாக சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் – கடத்தல், கட்டாயத் திருமணம் மற்றும் பலவந்தப்படுத்தி மாற்றுதல் ஆகியவற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

ஜம்மு – காஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய முழு யூனியன் பிரதேசங்களும், எங்களுடையவை. அவை எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதிலாகவே இருக்கும். பாகிஸ்தானின் பிரதிநிதிகள் எதை நம்பினாலும் அல்லது விரும்பினாலும், எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை நிறுத்துமாறு பாகிஸ்தானை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். குடிமக்கள் தங்களின் வாழ்வுரிமை மற்றும் சுதந்திரத்தைப் பயன்படுத்த முடியும்.அத்தகைய கூட்டங்களை துஷ்பிரயோகம் மற்றும் அரசியலாக்கும் முயற்சிகளில் இருந்து அவர்கள் ஒதுங்குவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

முன்னதாக, ஐ.நாவில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர், இந்தியா ஒரு இந்து மேலாதிக்க நாடாக மாறுகிறது என்று பொய்யான கூற்றுக்களை வெளியிட்டு, காஷ்மீர் பிரச்சினையைக் கிளப்பியிருந்தார்.

உரிமைகள் மற்றும் பாதுகாப்புக்கான சர்வதேச மன்றத்தின் (IFFRAS) படி, பாகிஸ்தான் பெருகிய முறையில் பழமைவாத இஸ்லாமிய திசையில் நகர்கிறது, மேலும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் பிற மத சிறுபான்மையினரின், குறிப்பாக பெண்களின் நிலைமை அங்கு மோசமடைந்துள்ளது.

பாகிஸ்தானில் இந்து மற்றும் கிறிஸ்தவ குழுக்களின் நிலைமை பொதுவாக மோசமாக உள்ளது, குறிப்பாக இந்த சமூகங்களைச் சேர்ந்த பெண்களின் நிலைமை தான் மோசமானது. அவர்கள் அதிகாரிகள், அரசியல் குழுக்கள், மதக் கட்சிகள், நிலப்பிரபுத்துவ அமைப்பு மற்றும் முஸ்லிம் பெரும்பான்மையினரின் பாரபட்சமான அணுகுமுறைகளால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

சிறுபான்மை மதத்தைச் சேர்ந்த பெண்கள் மற்றும் சிறுமிகள் கடத்தப்பட்டு, வலுக்கட்டாயமாக மதமாற்றம் செய்யப்பட்டு, கட்டாயத் திருமணத்துக்கு உள்ளாக்கப்பட்டு, துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றனர், மேலும் அவர்களது குடும்பங்கள் சட்டப்பூர்வ வழிகளைப் பயன்படுத்தி இந்தக் குற்றங்களைச் சவாலுக்கு உட்படுத்தும் முயற்சிகளில் தோல்வியுற்றதாக உரிமைகள் மற்றும் பாதுகாப்புக்கான சர்வதேச மன்றம் (IFFRAS) தெரிவித்துள்ளது.

கடத்தல்கள், கட்டாய மதமாற்றங்கள், கட்டாயத் திருமணங்கள், மத சிறுபான்மையினர் பெண்கள் மற்றும் சிறுமிகளின் தலைவிதி பெரும்பாலும் தற்போதுள்ள சட்டங்களால் 'சீல்' வைக்கப்படுகிறது. அல்லது சட்டப்பூர்வ உதவியின் மூலம் இதுபோன்ற வழக்குகளைக் கையாள்வதற்கு வாய்ப்பே கிடைப்பதில்லை அல்லது பயனற்றவையாக இருக்கின்றன.

மனித உரிமைக் குழுக்கள் பாகிஸ்தானின் மத சிறுபான்மையினரின் அவலநிலையை பல ஆண்டுகளாக ஆவணப்படுத்தியுள்ளன. ஆனால் சமீபத்தில்தான் இந்த சிறுபான்மையினர் கையாளப்படும் அவல முறைமை சமூக ஊடகங்கள் வெளிப்படுத்தியமையால் அவை பிரபலமான பேசு பொருளாக, உரைகளின் மையமாக மாறியுள்ளனர் என்று உரிமைகள் மற்றும் பாதுகாப்புக்கான சர்வதேச மன்றம் மேலும் தெரிவித்துள்ளது.

(மூலம்:என்.டி.ரி.வி.)

# கனடாவில் இனவாதத் தாக்குதல் அதிகரிப்பு: இந்தியர்களை எச்சரிக்கின்றது இந்திய அரசு

புதுடில்லி,செப் 24

கனடாவில் சமீப காலமாக இனவாத வெறுப்பு தாக்குதல் அதிகரித்து வருவதால், அங்கு செல்லும் இந்திய மாணவர்கள் எச்சரிக்கையுடன் இருக்கும்படி மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் எச்சரித்துள்ளது.


இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:–

வெறுப்பு தாக்குதல்கள், பிரிவினைவாத வன்முறைகள், இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கைகள் கனடாவில் சமீபகாலமாக அதிகரித்துள்ளன. இந்த குற்றங்கள் மீது விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு தூதரகம் வாயிலாக கனடாவிற்கு கூறப்பட்டும், இதுவரை குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை.

அதிகரிக்கும் குற்றங்களை கருத்தில் கொண்டு, இந்திய மக்களும், மாணவர்களும் இந்தியாவிலிருந்து கனடாவுக்கு செல்லும்போது, கவனத்துடன் இருக்க வேண்டும். ஏற்கனவே அங்கு வாழும் இந்திய மாணவர்கள் விழிப்புடன் இருப்பது அவசியம். அங்குள்ள இந்தியர்கள் ஒட்டாவா, டொரான்டோ, வான்கூவர் நகரங்களில் உள்ள தூதரகங்களில் முன்பதிவு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அப்போதுதான் ஏதேனும் அவசரநிலை ஏற்படும் போது, உங்களைத் தொடர்பு கொள்ள எளிதாக இருக்கும். – இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.







# சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை இளைஞர்களுக்கு கற்பிக்க வலியுறுத்து

சுற்றுச்சூழல் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை நமது இளைஞர்களுக்கு கற்பிக்க வேண்டும் என இந்தியப் பிரதமர் மோடி கூறியுள்ளார்.

குஜராத்தின் ஏக்தா நகரில் நடக்கும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்களுக்கான தேசிய மாநாட்டில் வீடியோ கொன்பரன்சிங் வாயிலாக பிரதமர் மோடி பேசினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:–

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த வழிமுறைகளை கற்றுக் கொண்டு, இந்தியாவின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என மாநாட்டில் பங்கேற்றவர்களுக்கு கோரிக்கை விடுக்கிறேன்.

உள்நாட்டு பொருளாதாரம் என்பது, நமது பாரம்பரியம் மற்றும் கலாசாரத்தின் ஓர் அங்கமாக பல ஆண்டுகள் திகழ்ந்தது. அந்த நடைமுறையை மீண்டும் கொண்டு வந்து நமது அன்றாட வாழ்க்கையில் புகுத்த வேண்டும். பல ஆண்டுகளாக சிங்கங்கள், புலிகள், யானைகள், காண்டாமிருகங்கள், சிறுத்தைகள் ஆகியன தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தியாவில், சிவிங்கிப் புலிகளுக்குக் கிடைத்த உற்சாக வரவேற்பானது, இந்தியாவின் தனித்துவமான விருந்தோம்பலுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

தேசிய கல்விக்கொள்கை மூலம், அனுபவரீதியான கற்பித்தலை ஒருங்கிணைப்பதுடன், சுற்றுச்சூழலை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை நமது இளைஞர்களுக்கு கற்பிக்க வேண்டும். – இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

**‘கம்பவாரிதி’ இலங்கை ஜெயராஜ் தமது ‘உகரம்’ இணையத்தளத்தில் ‘பாட்டும் நானே! பாவமும் நானே!’ என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி ‘காலைக்கதிர்’ நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.**

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** சம்பந்தருக்குச் சீ.வி.கே. சிவஞானத்தைப் பிடிக்கவில்லை, சிவஞானத்திற்கு மாற்றணித் தலைவர்களைப் பிடிக்கவில்லை, மாற்றணித் தலைவர்களுக்குச் சுமந்திரனைப் பிடிக்கவில்லை, சுமந்திரனுக்கு சீ.வி.விக்னேஸ்வரனைப் பிடிக்கவில்லை, விக்னேஸ்வரனுக்குக் கஜேந்திரகுமாரைப் பிடிக்கவில்லை, கஜேந்திரகுமாருக்கு மணிவண்ணனைப் பிடிக்கவில்லை, இவ்விதமாய் நம் தலைவர்களின் பகை ’லிஸ்ட்’ நீண்டு கொண்டே போகிறது. இப்படியே போனால் முடிவு என்னாகப் போகிறது?

**பதில் :-** வெட்கித் தலைகுனிவதை விட வேறு என்ன செய்யமுடியும்? கேட்டால், நம் இனத்தின் உரிமைக்காய்ப் பாடுபடுவதுதான் தமது இலட்சியம் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஒரே இலட்சியத்தை ஏற்றவர்களுக்குள் இத்தனை பகைகளா என்று ஆச்சரியப்படவேண்டி இருக்கிறது. இவர்களின் இப்பகைகள் இனத்தின் உயர்வு நோக்கி ஏற்பட்டவை அல்ல. தத்தம் உயர்வு நோக்கி ஏற்பட்டவை. போரால் அழிந்து கிடக்கும் நம் இனத்தை நிமிர்த்தவேண்டிய இவர்களின் செயற்பாடு கண்டு உலகமே சிரிக்கிறது.

‘அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு’ என்ற தமிழில் இருக்கும்; பழமொழியை ஏனோ இவர்கள் மறந்து போனார்கள். தமது உயர்வை மனதில் வைத்துக்கொண்டு இன உயர்வுக்காய்ப் பேசுவது போல இவர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றுகிற உரைகள் எல்லாம், ‘கட்டப்பொம்மன்’ பட வசனங்கள் போல வெறும் நாடகக் கொந்தளிப்பாய்த்தான் இருக்கின்றன. இத்தகைய பொய்மை உரைகளுக்குக் கைதட்டுவோர் கூட்டம் என்ற ஒன்று இருக்கும் வரை, ‘உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசும்’ இவர்களின் வாழ்வு ஓடிக்கொண்டுதான் இருக்கும். என்ன செய்ய? இது தமிழினத்தின் விதி போலும்! ஆனால் ஒன்று என்றோ ஒருநாள் சத்தியம் வெல்லத்தான் செய்யும். அப்போது தமிழ்மக்களுக்குப் பிடிக்காதவர்கள் ‘லிஸ்டில்’ இவர்கள் அனைவரது பெயரும் வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இவர்கள் எல்லாருக்கும் வாரிஸ்ரீதியாரைப் பிடிக்காமல் போகப் போகிறது.**

**2. கேள்வி:-** தமிழ்மொழியுடனான வடமொழிக் கலப்பை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அதுபோலவே இன்று நிகழும் தமிழ் மொழியுடனான ஆங்கில மொழியின் கலப்பையும் நாம் ஏன் ஏற்றுக் கொள்ளக் கூடாது?

**பதில் :-** அது பிழையான ஒரு வாதம். தமிழுடனான ஆங்கில மொழிக்கலப்புப் பற்றித் தமிழறிஞர்கள் பலர் கவலை கொள்கிறார்கள். இன்றைய தமிழ் இளைஞர்கள் பேசும்போது ஒரு சொல்லுக்கு நான்கு சொற்களாய் தமிழுடன் ஆங்கிலத்தைக் கலக்கிறார்கள். போகிறபோக்கில், ஆங்கிலம் தமிழை விழுங்கிவிடுமோ என்று நினைக்கவேண்டி இருக்கிறது.

வேற்று மொழியின் வருகையும் கலப்பும் தமிழ் மொழியைப் பொறுத்தவரை புதிய விடயங்கள் அல்ல. அதற்கு இன்றைய ஆங்கிலமொழியின் வரவும் கலப்புமே நல்ல உதாரணம். தமிழ்த் தாய் இப்படி எத்தனையோ இன்னல்களுக்கு முகம் கொடுத்துத்தான் இன்றும் தன் தனித்துவம் கெடாமல் நிலைத்து நிற்கிறாள்.

வடமொழி தமிழ்மொழியுடன் கலந்தபோது, வடமொழி எது? தமிழ்மொழி எது? என்று தெரியாதபடி வடமொழி தமிழ் மொழிக்குள் நுழைந்த ஒரு காலம் இருந்தது. அக்காலத்தில் வடமொழிச் சொற்களின் இணைப்பே, தமிழ்மொழிபோல் ஆகித் தமிழரால் விளங்கப்பட்டும் இருக்கிறது. அருணகிரிநாதருடைய திருப்புகழில் மேற்சொன்ன தன்மையை நாம் காணலாம்.

*‘நாதவிந்து கலாதி நமோநம*
*வேத மந்த்ர சொரூபா நமோநம’*

- என்ற திருப்புகழ்அடிகளில் தமிழில் ஒரு சொல்லுத்தானும் இல்லை. ஆனால் அது தமிழ்ப்பாடலாய் நம் முள் பதிந்திருக்கிறது. அப்படித்தான் இன்றைக்கும் ஆங்கிலத்தைத் தமிழுடன் சரிக்குச்சரி கலந்து அதனைத் தமிழ்போல் பேசுகிறார்கள்.

அப்படியானால் ஒரு காலத்தில் வடமொழி கலந்தது போல இப்போது ஆங்கிலம் கலப்பதில் என்ன தவறு என்று கேட்பீர்கள்? அதன் வித்தியாசத்தை நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

நம் தமிழின் இலக்கண நூல்கள் வடமொழிக்கு, மற்றைய பிறமொழிச் சொற்களைவிடத் தனி அங்கீகாரம் கொடுத்துள்ளன. வெளித்தேசங்களில் இருந்து வந்த வேற்றுமொழிச் சொற்களை, ‘திசைச்சொற்கள்’ எனத் தனியே பிரித்துக்காட்டிய தமிழ் இலக்கண நூலோர் சிலர், அந்த வரிசைக்குள் வடமொழியைச் சேர்க்காமல் சொற்பிரிவில் அதனைத் தனியே சேர்த்துக் கொண்டுள்ளனர். வடமொழியைத் திசைச்சொற்களுக்குள் சேர்க்காமல் விட்ட அவர்தம் செயலே, வடமொழிக்கும் தமிழ்மொழிக்குமான இணைப்பின் அவசியத்தை நமக்கு உணர்த்துகின்றது.

அதைவிட முக்கியமான ஒன்றைச் சொல்லவேண்டும். தமிழின் முதல் இலக்கண நூலாசிரியரான தொல்காப்பியர், ஒரு மொழியுடன் மற்றொரு மொழி கலந்து நீண்ட நாட்கள் நின்று பிடிக்குமாயின், அம்மொழியை நாம் ஒதுக்கவேண்டியதில்லை என்கிறார். ‘கடி சொல் இல்லை காலத்துப் படினே’ எனும் தொல்காப்பியச் சூத்திரம் இவ் உண்மையை உரைக்கிறது என்கிறார்கள்.

வடமொழியும், தமிழ்மொழி போன்று நீண்ட தொன்மை கொண்டது. ஆங்கில மொழியோ அண்மையில்தான் வந்து நம் தமிழ்மொழியில் கலந்தது. அம்மொழி பிறந்தே ஐந்நூறு ஆண்டுகள் அளவில் தான் ஆகிறது என்கிறார்கள். அதனால், நீண்டநாள்கள் நம் மொழியுடன் தொடர்புபட்டிருக்கும் வடமொழியை, நாம் ஆங்கிலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது.

அதுதவிர, வேறொன்றையும் நாம் சிந்திக்கவேண்டும். வடமொழிக்கும் தமிழ்மொழிக்குமான உறவு வேறு. ஆங்கிலத்திற்கும் தமிழிற்குமான உறவு வேறு. கலை, கலாசாரம்,பண்பாடு, சமயம், தத்துவம் போன்ற பல விடயங்களாலும் வடமொழி தமிழ்மொழிக்கு உறவாய் இருக்கிறது. அதனால் வடமொழிக் கலப்பால் தமிழின் வேர்கள் அசைக்கப்படவில்லை. ஆங்கிலம் அப்படியல்ல. மேற்சொன்ன விடயங்கள் அனைத்திலும் அது தமிழ்மொழியோடு வேறுபட்டிருக்கிறது. அதனால் அம்மொழியுடனான கலப்பால் நம் தமிழினம் காலா காலமாகத் தான் போற்றிவந்த அடிப்படை விடயங்கள் பலவற்றை இழக்கும் அபாயச் சூழ்நிலை ஏற்படலாம். இன்று அப்படித்தான் நடந்து கொண்டிருக்கிறது. அதனால்தான் தமிழ்மொழியுடனான ஆங்கிலத்தின் கலப்பை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்கிறார்கள் அறிஞர்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * முந்துதமிழ் ஆங்கிலத்தையும் முந்தும் தமிழாய் நின்றுபிடிக்குமுங்கோ!**

**3. கேள்வி:-** என்னாயிற்று ஐ.நா. மனித உரிமைகள் ‘கவுன்ஸில்’ சபைக்கூட்ட முடிவு?



**பதில்:-** வழமையைவிட இம்முறை அதன் கயிறு இலங்கையின் கழுத்தைச் சற்று இறுக்கியிருக்கிறது. 52 முன்னாள் இராணுவத் தளபதிகளைக் குற்றவாளிகளாய்க் கண்டு அது உலகிற்கு அறிவித்திருக்கிறது. அவர்கள், குறித்த சில நாடுகளுக்குள் நுழைந்தால் இனிக் கைது செய்யப்படுவார்களாம். மற்றும்படி தமிழர்களின் உரிமை விடயத்தில் மீண்டும் கஞ்சி ஆற விடப்பட்டுவிட்டது என்றே நினைக்கிறேன்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இப்ப அவர்கள் எந்தெந்த நாட்டில எப்படியெல்லாம் வசதியோட வாழ்ந்து கொண்டிருக்கினமோ? கைது செய்யக்கூடிய நாடுகளுக்குப் போக அவையளுக்கு என்ன விசரே? ஹி..ஹி..!**

**4. கேள்வி:-** தமிழ் நாட்டின் ஆளும் திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் அமைச்சர் ஒருவர், இந்துக்கள் எல்லாம் விபச்சாரியின் மக்கள் எனப் பேசியிருப்பதையும், அதற்குப் பரவலாக எதிர்ப்புக் கிளம்பியிருப்பதையும் பார்த்தீர்களா?

**பதில்:-** உண்மையில் திராவிடர் முன்னேற்றக் கழகத்தினைப் போற்றவேண்டித்தான் இருக்கிறது. முதலமைச்சரின் மனைவி விபூதி, குங்குமத்துடன் இந்து ஆலயங்களுக்குத் தொடர்ந்து சென்று வருவதையும், அவர்களின் உறவினர்களான முரசொலி சகோதரர்கள் ஆலயங்களில் அபிகேம் செய்து வலம் வருவதையும், அந்தணர்கள் பலர் முதலமைச்சருக்கு வேதம் ஓதிப் பிரசாதம் கொடுப்பதையும் அடிக்கடி தொலைக்காட்சியில் பார்த்து வருகிறோம். எனவே இவர்கள் எல்லாம் இந்துமதத்தைப் பேணி வருகிறார்கள் என்று தெரியவருகிறது.

அப்படியிருக்க ராஜா இந்துமக்களை விபச்சாரிகளின் பிள்ளைகள் என்று சொல்கிறார் என்றால், மேற்சொன்னவர்களும் அந்த வரிசைக்குள் அடங்குவார்கள் தானே! தம் கட்சித் தலைவரையும், குடும்பத்தாரையும் இந்த அளவு கீழ்த்தரமாய் விமர்சிக்க முடியுமென்றால், திராவிடர் முன்னேற்றக் கழகம் தம் உறுப்பினர்களுக்கு அளித்திருக்கும் சுதந்திரத்தைப் போற்றவேண்டித்தான் இருக்கிறது. ராஜாவின் கருத்தை மானமுள்ள இந்துக்கள் எதிர்க்கிறார்கள். முதலமைச்சரின் குடும்பத்தாருக்கும் அது இருந்தால், அவர்களும் நிச்சயம் ராஜாவை எதிர்ப்பார்கள்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * ‘சும்மா இருந்த சங்க ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி’ என்கிறது இதைத்தான்!**

**மந்திரி ராஜா சீக்கிரம் எந்திரி ராஜாவாகப் போகிறார் போல...**

**5. கேள்வி:-** உலகம் முழுவதையும் அடிமைப்படுத்தி ஆண்ட ஒரு அரசகுடும்பத்தலைவருக்கு, அவர்களால் அடிமைப்படுத்தி ஆளப்பட்ட நாடுகளின் தலைவர்களெல்லாம் சென்று மரியாதை அளிப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** ’ஆண்டவனுக்கு’த்தான் அது வெளிச்சம்!

**உலகநாதரின் ஒப்பீனியன் * செல்வச்செழிப்பு வரலாற்றையும் மறக்கச் செய்துவிடும் போல.**

**6. கேள்வி:-** என்ன ரஷ்ய, உக்ரெயின் சண்டை எங்கு போய்க்கொண்டிருக்கிறது?

**பதில்:-** ரஷ்யாவால், உக்ரெயினை நினைத்தபடி சீக்கிரமாய்ப் பிடிக்கமுடியவில்லை. அதற்குக் காரணம் உக்ரெயினின் பலம் அல்ல. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் கைகள் உள்நுழைந்து ஆதரவளிப்பதாலேயே இந்த அளவிற்கு உக்ரெயினால் நின்றுபிடிக்க முடிகிறது. வெற்றி தோல்விக்கு அப்பால், உக்ரெயின் நாடு சிதைக்கப்பட்டுவிட்ட உண்மையையும் மறுக்க முடியாது. பெப்ரவரி மாதத்தில் தொடங்கிய இப்போர் இவ்வளவு நீண்டு செல்லும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. இந்த வாரத்தில் இந்தப் போரின் நிலையில் ஒரு புதியமாற்றம் நிகழப்போவதாய்ச் சொல்கிறார்கள்.

(11ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir

# மாணவர் மதிய உணவிற்கு தேங்காய்த் துண்டுகளை எடுத்து வந்த செய்தியில் எந்தவித உண்மையில்லை!

## மறுக்கிறது ஜனாதிபதி ஊடகப்பிரிவு

வறுமை காரணமாக மாணவத் தலைவி ஒருவர் மதிய உணவுக்கு தேங்காய்த் துண்டுகளை பாடசாலைக்கு எடுத்து வந்தார் எனத் தேசிய பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியான செய்தி தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது.

இதனையடுத்து அந்தச் செய்தி தொடர்பில் தகவல்களைப் பெற ஜனாதிபதி அலுவலகம் நடவடிக்கை எடுத்தது.

இதன்படி மினுவாங்கொடை பிராந்திய பணிப்பாளர் வஜிர ரணராஜா கம்பஹா மாவட்ட செயலாளர் பிரியூ. சத்தியானந்த, திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர், மினுவாங்கொடை கல்வி வலய திவுலப்பிட்டி கல்விப் பிரிவின் பணிப்பாளர், கொங்கொடமுல்ல புனித அந்தோனியார் கனிஷ்ட கல்லூரியின் அதிபர் ஆகியோரிடமிருந்து தகவல்கள் பெற்றப்பட்டன.

அத்துடன் மாணவி வாழும் பிரதேச கிராம உத்தியோகத்தர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரிடம் இருந்தும் தகவல்கள் பெறப்பட்டன.

எனினும் இந்தத் தகவல்களின்படி அவ்வாறானதொரு சம்பவம் எதுவும் அந்தப் பகுதியில் பதிவாகவில்லை என்று உறுதியாகியுள்ளது.

எவ்வாறாயினும் தற்போதைய பொருளாதார நிலைமைக் காரணமாக உணவு நெருக்கடி ஏற்பட்டால் இதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எந்தவொரு குழந்தையோ, நபரோ அல்லது குடும்பமோ உணவு நெருக்கடிக்கு உள்ளானால் இதற்குத் தீர்வு காண விசேட வேலைத்திட்டமொன்று பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மட்டத்தில் ஏற்கனவே நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் ஜனாதிபதியின் விசேட பணிப்புரையின் பேரில் ஜனாதிபதி அலுவலகத்தில் உணவுப் பாதுகாப்புத் திட்டப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 0114354647 மற்றும் 0114354354 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து 5705/5707 ஆகிய நீட்டிப்பு இலக்கங்களின் ஊடாக ஜனாதிபதி அலுவலகத்துக்கு இது தொடர்பான தகவல்களை வழங்க முடியும்.

உலக உணவுத் திட்டத்தின் கீழ் உதவி பெறத் தகுதியான அளவுகோல்களைக் கொண்ட தரப்பினராக 05 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சமுர்த்தி பயனாளிகளது குடும்பங்கள், ஊனமுற்றோர் மற்றும் நாட்பட்ட நோயாளர் களைக் கொண்ட குடும்பங்கள், 05 வயதுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட ஏழ்மையான குடும்பங்கள், கணவன் அல்லது மனைவி இல்லாத குடும்பங்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களைக் கொண்ட குடும்பங்கள், ஆரம்பக் கல்வி கூட பெறாத ஏழைக் குடும்பங்கள், கடுமையான உணவுப் பற்றாக்குறையுள்ள குடும்பங்கள் மற்றும் கடுமையான உணவுப் பஞ்சத்தில் இருக்கும் குடும்பங்கள் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவ்வாறான குடும்பங்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாதாந்தம் 15 ஆயிரம் ரூபாவை கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக வழங்க முடியும். அதற்கமைய முதல் 03 மாதங்களுக்கு பணம் வழங்கப்படுவதுடன் மேலும் 06 உணவு வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இதுதவிர மாதந்தோறும் 10 ஆயிரம் ரூபா வீதம் 6 மாதங்கள் வரை கொடுப்பனவு வழங்க அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் உள்ளடங்காத மற்றும் தற்சமயம் உணவு கிடைக்காமல் தவிக்கும் குடும்பங்கள் இருப்பின் அவர்களுக்கு குறுகிய காலத்தில் உணவு வழங்க வாய்ப்பு உள்ளது. கிராம அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள் ஊடாக ஜனாதிபதி செயலகத்தின் உணவு பாதுகாப்புத் திட்டப் பிரிவுக்கு கோரிக்கை முன்வைக்க வேண்டும்.

மேலும் ஊட்டச்சத்து குறைபாடுள்ள மாணவர்களைக் கொண்ட குடும்பங்கள் இருந்தால் அது தொடர்பில் ஆய்வுகள் நடத்தப்பட்டு அத்தகைய குடும்பங்களுக்கு அரசாங்கம் செயல்படுத்தி வரும் பெற்றோர் பாதுகாவலர் திட்டங்கள் மூலம் உணவு உதவித் திட்டங்கள் வழங்கப்படும்.

மேலும் உணவின்றி தவிக்கும் குடும்பங்கள் பற்றிய தகவல்களை பாடசாலை ஆசிரியர்களும் சேகரித்து ஜனாதிபதி அலுவலகத்துக்கு அனுப்ப முடியும். அத்தகைய குடும்பங்களுக்கு உதவ விரும்புபவர்களும் இதில் இணைந்து உதவி வழங்க முடியும்.

அதுமட்டுமின்றி கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஜனாதிபதி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இந்த வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்ய முடியும் என ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

# மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவன அணுகுமுறை மாறும் வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும்

## செந்தில் தொண்டமான் எச்சரிக்கை

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்தின் அணுகுமுறை மாறும் வரை தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கிரேக் தோட்ட தொழிற்சாலையில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களை அவர் சந்தித்து கலந்துரையாடும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனம் தொழில் சட்டத்தை தொடர்ந்து மீறுவது குறித்தும் தோட்டத் தொழிலாளர்கள் மீதான நவீன அடிமைத்தனம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



தொழிலாளர்களின் உரிமைகள் மீட்கப்பட்டு இ நிர்வாகத்தின் அணுகுமுறை மாறும் வரை தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் தேயிலை தொழிற்சாலையில் இருந்து வெளியேற்றுவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போராட்டத்தின் மூலமே ஊழலை நிறுத்த முடியும்!

## சரத் பொன்சேகா திட்டவட்டக் கருத்து

நாடாளுமன்றம் நாட்டுக்கு சேவை செய்வதற்குப் பதிலாக நாட்டைச் சிதைக்கச் செய்தது என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மெழுகுவர்த்தியில் இருந்து வானொலி, தொலைக்காட்சி என ஒவ்வொரு பொருளின் விலையும் மிக அதிகமாக உயர்ந்துள்ளதாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஜஸம்எப் என்று மட்டும் சொல்கிறதே ஒழிய மக்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசிடம் தீர்வு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும்போது மக்கள் வீட்டில் தங்கி கதவுகளைத் திறக்க முடியாது எனவும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கரிம உரக் கொள்கையால் விவசாயியும் நாட்டின் ஒட்டுமொத்த விவசாயமும் அழிந்துவிட்டது என்று கூறிய அவர் கோட்டபய ராஜபக்ஷவும் கரிமக் கொள்கையால்தான் வீட்டுக்குச் செல்ல நேரிட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

அப்படி இருந்தும் சில மக்கள் பிரதிநிதிகள் வெட்கமின்றி இன்னும் இயற்கை உரம் பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது என்றும் சரத் பொன்சேகா மேலும் கூறியுள்ளார்.



இவ்வாறான நெருக்கடிகள் அனைத்துக்கும் காரணம் ஊழல் அரசியல் கலாசாரத்தின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு வந்த ஊழல் அரசியல்வாதிகள் எனவும் இவ்வாறான ஊழல் அரசியல்வாதிகள் ஐம்பது வீதமானவர்கள் இருக்கின்றனர் எனவும் பீல்ட் மார்ஷல் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊழல் அரசியல்வாதிகளிடமிருந்து நாட்டைக் காப்பாற்ற மீண்டும் போராட்டம் நடத்தப்பட வேண்டும் என்றும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அந்த ஊழல் அரசியல்வாதிகளை வாக்கு மூலம் வீட்டுக்கு அனுப்ப முடியாது என்றும் ஊழல் அரசியல்வாதிகள் போராட்டத்திற்கு மட்டுமே பயப்படுகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இனிப்பு வகைகளின் விலைகளை 10 - 13 வீதத்தால் குறைக்க முடிவு!



உடன் அமுலுக்கு வரும் வகையில் இனிப்பு வகைகளின் விலையை 10 முதல் 13 வீதத்தால் குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மிட்டாய் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ்.எம்.டி.சூரிய குமார இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார். இதற்கமைய அனைத்து தயாரிப்பு வகைகளிலும் தின்பண்டங்களின் விலை குறைவடையும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு முக்கிய பொருள்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளன எனவும் இதனால் சந்தையில் இனிப்புகளின் விலையைக் குறைக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இனிப்பு உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் சீனியின் விலை கிலோ ஒன்றுக்கு 40 ரூபாவாலும் தாவர எண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 250 ரூபாவாலும் குறைவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# டெங்கு நோய் பரவும் விகிதம் அதிகரிப்பு!

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் பரவும் விகிதம் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இந்த மாதத்தின் இது வரையிலான காலப்பகுதியில் மாத்திரம் 2 ஆயிரத்து 298 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.



# பெற்றோலியப் பொருள்கள் சட்டமூலத்தின் முரணான சரத்துக்கள் திருத்தப்பட்டுமாம்!

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பெற்றோலியப் பொருள்கள் சிறப்பு ஏற்பாடுகள் திருத்தச் சட்டமூலத்தில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ள அரசமைப்புக்கு முரணான சரத்துக்கள் மற்றும் பகுதிகள் திருத்தப்பட்டு உடனடியாக சமர்ப்பிக்கப்படும் என எரிசக்தி மற்றும் மின் சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தமிழரும் சர்வதேசமும்



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 130**




தமிழ் மக்களின் இந்தப் போராட்டங்களின்வரலாற்றில்நடந்த இப்படியான'துரும்பும் பல் குத்த உதவும்' என்பது போன்ற பல சம்பவங்களைக் கூறிக் கொண்டே போகலாம்.

கிடைத்த சந்தர்ப்பங்களை புத்தி சாதுரியத்துடன்பயன்படுத்தி, பாதையைச் செப்பனிட்டு இருக்கலாம். சிந்திய பாலை மீள எடுத்துக்கொள்ள முடியாது என்பது போல் இவை காலம் கடந்தவையாகி விட்டன.

ஆயினும் லட்சியம் மட்டும் தொங்கிய படி வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் அந்த லட்சியத்தையும் அழித்து



ஒழிக்கப் போரின் முடிவில் சிங்களப் பேராண்மையும் தனது பாதைகளில் கங்கணங்களுடன் கெம்பி எழுந்து நின்றது.

நாங்களும் தோற்றுவிடவில்லை, 'பாதைகள் மாறலாம், ஆனால் லட்சியம் மாறாது' என்று புலம்பெயரிலிருந்த விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் நாடு கடந்த தமிழீழ அரசின் வழிகளின் ஊடாக, சர்வதேசத்தின் ஆதரவுடன், தமிழ் மக்களின் அரசியல் சுயநிர்ணய உரிமையில் அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுப்போம் என்று பிரகடனப்படுத்தினார்கள்.

நாட்டில் இருந்த தலைவர்களோ வன்முறையற்ற வழிகளின் மூலம் சர்வதேச இராஜதந்திரங்களினால் தமிழ் மக்களது இனப் பிரச்சினைக்குத் தீர்வுகள் பெற்றுத் தருவோம் என மக்களிடமிருந்து தனி நாட்டு கோரிக்கையைத் தவிர்த்து, மீண்டும் சமஷ்டிக்கே ஒப்புதல் பெற்றுக் கொண்டார்கள்.

இந்த இரண்டு பிரச்சாரங்களுக்குமே அத்திபாரமாக இருந்தது விடுதலைப் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்காக முள்ளிவாய்க்கால் வரை நடத்தப்பட்ட அட்டூழியங்கள்தான்.

சர்வதேசம் விடுதலைப் புலிகளின் அழிப்புக்கு அவர்கள் மேல் வைக்கப்பட்ட பயங்கரவாத முத்திரையில் சமாதானங்கள் கூறினாலும், மறுகையில் அவற்றுக்காக நடத்தப்பட்ட அட்டூழியங்களையும், மனித உரிமை மீறல்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இவை இனப்பிரச்சினையாலும் அதைத் தீர்ப்பதற்கான இராணுவ முறைகளாலும் ஏற்பட்டவை, ஆகவே இவ்வகையான மனித உரிமை மீறல்கள் சர்வதேசத்தின் கண்காணிப்புக்கு வர வேண்டுமென நிப்பந்தித்தாதாலும், ஐ.நா. பொதுச் செயலாளர் பான் – கீ – மூனுக்கு அன்றைய ஜனாதிபதி மஹிந்ததான் அடுத்து உடனடியாகத் தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவேன் என்று கூறிய உத்திரவாதங்களும்தான் அத்திபாரங்களாகின.

தமிழ் மக்களின் இந்த இரு தரப்புகளுமே தங்களது அரசியல் இருப்புகளுக்



காக சர்வதேசத்தின் தேரில் மிக விரைவானதொரு தீர்வு வந்து விடும் என கொடி கட்டிப் பறந்து நம்பிக்கையில் இருந்தார்கள்.

பழையபடி மஹிந்தவோ, நல்லாட்சி காலத்தில் சிறிசேனாவோ பேரினவாதத்தின் பிரதிநிதிகளாக தந்தது வெறும் கயிறுதான்.

சர்வதேசம் 15 மார்ச் 2006 இல் ஸ்ரீலங்காவை ஒட்டி 60/251 என்ற தீர்மானத்தை நிறைவேற்றி, அதனைத் தொடர்ந்து ஐ.நா. மனித உரிமைகள் மன்று அங்கத்துவ நாடுகளில் ஊடாக 18 ஜூன் 2007 இல் தொடக்கம் பல தொடர் தீர்மானங்களை, இனங்களுக்கிடையே இணக்க ஒருமைப்பாடுகளுக்காகவும், நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பு கூறவும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளின் அறிவுறுத்தலுக்காகவும் நிறைவேற்றின.

இந்தத் தீர்மானங்கள் தந்த நம்பிக்கைகளில் சர்வதேசம்தான் தங்களுக்கு விடிவைத் தரும் எனவும், சர்வதேசம் சிங்களத் தரப்புகளை சும்மா விடாது எனவும், அவர்களது தலைவர்களால் சூளுரைக்கவும் வைக்கிறது.

ஆயினும் இதனை எழுதும் போது இருக்கும் 2022 வது ஆண்டின் நகல் பிரேரணை வடிவம் வெளியாகியுள்ளது. அது, மன்று நிறைவேற்றிய பழைய தீர்மானங்களைச் சுட்டிக்காட்டி, அவற்றில் ஏற்கப்பட்டவை நடைமுறைப்படுத்தப்படாதமை குறித்து அங்கலாய்ப்பு தெரிவித்து, அன்றிலிருந்து இன்று வரை முக்கியமாக கத்தோலிக்கர்களுக்கும், முஸ்லிம் மக்களுக்கும், காலிமுகத்திடல் போராளிகளுக்கும் எதிரான மீறல்களையும் குறித்து, விசனங்கள் தெரிவித்து, அதேசமயம் இவை பற்றி அரசாங்கம் கொண்டுள்ள அக்கறைகள், அக்கறையீனங்களால் நாடு அதல பாதாளத்தில் விழுந்திருப்பதையும் கணக்கெடுத்து, நாட்டின் எல்லா மக்களும் விடிவு பெற வேண்டிய தேவையை முன்னிறுத்தி உள்ளது.

அதற்காக அவை பற்றிய முன்னேற்றங்களை மனித உரிமை ஆணையாளர் தனது வாய்மொழி அறிக்கைகளை அதனது 53, 55 வது கூட்டத் தொடர்களிலும், எழுத்து மூலமாக 54ஆவது கூட்டத் தொடரிலும் சமர்ப்பிக்கக் கேட்கிறது. அதே சமயம் இந்த அறிக்கைகளின் சாரம், காரங்களில் இருந்து, மேலதிகமாக எப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக அதனது 57 ஆவது கூட்டத் தொடரில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவும் கேட்டுள்ளது.

நோர்வே ஏற்படுத்திய போர் நிறுத்த ஒப்பந்தம் 2006இல் முறிக்கப்பட்ட நாள்களுக்குப் பின் முள்ளிவாய்க்கால் நடந்த 2009 ஆண்டிலிருந்து, சென்ற காலங்களையும் 57ஆவது கூட்டத்தொடர் வரையாகும் காலத்தையும் மனதில் கொள்ள வேண்டும். சர்வதேசம் ஆடி அசைந்துதான் நகரும். அப்படியாகும் காலத்தைக் கணக்கிட்டே சிங்களப் பேராண்மை செயற்படுகிறது. ஆறுதலாக ஓடிய ஆமை, துடிதுடிப்பாய் ஓடிய முயலை வென்றதாகக் கதை உண்டு. இங்கு துடிதுடித்து 2009 இல் இருந்து ஓடிய தமிழ் மக்களை, ஆறுதலாக இவற்றை இழுத்தடித்த ஸ்ரீலங்கா ஆமை வென்று கொண்டு வருகின்றதா என்பதையும் தமிழ் மக்கள் தங்களிடைய கேட்டுக் கொள்ள வேண்டும். சர்வதேசத்தின் நடவடிக்கைகள்



காலப்போக்கில் ஆடி அசைந்து காரிய சித்தி ஆகலாம். ஆனால் அந்தக் காரியம் சித்தியானாலும் தமிழ் மக்களுக்கு வாழ்வாதாரம், பிரதேசம் என்பவை கையில் இருக்குமா என்பது கேள்விக்குறியாகி கொண்டு போகிறது. '**Operation successful but unfortunately patient died**' என்ற செய்திகளைத்தான் கொண்டு வருமா எனப் புலம்பெயரின் நடப்புகள் ரணிலைக் கொண்டாடும் விதத்தில் ஆதங்கப்பட வேண்டி உள்ளது.

மனிதர்கள் மாறலாம். ஆனால் பிரேமதாசா போன்று தங்களுடைய மனங்களில் ஆழப் பதிந்துள்ள பேராண்மை பதிவுகளை மனச்சுத்தியுடன் வெளியேற்றிய மனிதர்களாக நேசக்கரம் நீட்டுகிறார்களா என அறிந்து செயல்படுதல் அவசியம்.

(வளரும்....)

## தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலித்து ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் பின்னர் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பினர் கூட்டாக ஊடக சந்திப்பை நடாத்தி இந்த கோரிக்கையை விடுத்தனர்.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட தவத்திரு வேலன் சுவாமிகள், 'சுயாதீனமாக உருவாக்கப்பட்ட தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு சுயாதீனமாகவும் வெளிப்படுத்தன்மையோடும் இயங்கிவருகின்றது. எங்களை யாரும் அணுகி தங்களுடைய ஆலோசனைகள் கருத்துக்களை முன்வைக்கலாம்.

'இதனடிப்படையில் தமிழ் தேசிய பரப்பில் இருக்கின்ற கட்சிகளுடைய தலைவர்கள், பிரதிநிதிகள் உடனான சந்திப்பு நடைபெற்றது. இதன்போது சில தீர்மானங்கள் எட்டப்பட்டன. இதன்படி, எதிர்வரும் செப்டம்பர் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை உண்ணாநோன்பு இருந்து எங்களுடைய வீர வணக்கத்தையும் அஞ்சலியையும்தியாகதீபம்திலீபனுக்குஅனைத்து தமிழ் உறவுகளும் செய்ய வேண்டும்.

தியாக தீபம் திலீபன் இன்னுயிரை ஈந்த இந்த நல்லூர் பூமியிலே அவருடைய நினைவாலயம் அமைந்திருக்கின்ற இடத்திலே உண்ணாவிரதம் நடைபெற இருக்கின்றது.

எந்தக் கோரிக்கைகளை முன்வைத்து தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதம் இருந்தாரோ, பார்த்திபன் இன்னமும் பசியோடு தான் இருக்கின்றார் என்ற வாக்கியத்துக்கமைய இன்றும் அதே பிரச்சினைகளை ஒவ்வொரு வடிவங்களிலே எதிர்கொண்டிருக்கின்றோம். அவற்றுக்கான நிரந்தர தீர்வு வேண்டியும் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு வேண்டியும் உண்ணாநோன்பை இருக்க தீர்மானித்திருக்கின்றோம்.

பெருமளவானோர் இதில் பங்குபற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அறைகூவல் விடுக்கின்றோம். 'மக்கள் புரட்சி வெடிக்கட்டும்' என்ற வாக்கியத்துக்கமைய மக்களுடைய புரட்சி எழுச்சியாக அமைய வேண்டும்.

தியாக தீபம் திலீபனுடைய நினைவு நாளான செப்டம்பர் 26ம் திகதி திங்கட்கிழமை தமிழர் தாயகத்தின் பல பாகங்களில் இருந்தும் ஊர்திகள் பவனி வர இருக்கின்றன. அனைத்து ஊர்திகளும் காலை 10 மணிக்கு முன்பதாக நல்லூர் தியாக தீபம் திலீபனுடைய நினைவாலயத்தை வந்தடையும். தியாக தீபம் திலீபனின் உயிர் பிரிந்த 10.48 மணிக்கு மலரஞ்சலி இடம்பெறவிருக்கின்றது. இதன்போதும் மக்கள் பெரும் எழுச்சியாக வரவேண்டும்.

வாகன ஊர்திகள், தூக்குகாவடிகளை எங்கள் உறவுகள் காலையில் இருந்து அவற்றை கொண்டுவரலாம். தியாக தீபம் திலீபன் பிறந்த ஊரெழுவிலிருந்து ஊர்தி நல்லூர் நினைவாலயத்தை நோக்கி வந்தடைய இருக்கின்றது. இந்த ஊர்திகளுடன் இணைந்து பயணித்துக் கொண்டு பொது மக்கள் வரவேண்டும் என தியாக தீபம் திலீபனுடைய நினைவேந்தல் பொதுக் கட்டமைப்பு சார்பில் இந்த அழைப்பை விடுகிறோம்.

தமிழ் தேசியப் பரப்பிலே இருக்கின்ற அரசியல் கட்சிகள் மற்றும் பொது அமைப்புகள், வர்த்தக சங்கங்கள் மாதர் சங்கங்கள், முச்சக்கர வண்டி சங்கங்கள், மீனவர் சங்கங்கள், விவசாய அமைப்புகள், பாடசாலை மாணவர்கள்,ஆசிரியர்கள், கிராம அபிவிருத்தி நிலையங்கள், விளையாட்டு கழகங்கள், இளைஞர் அமைப்புகள் என அனைத்து மக்களும் இவற்றை ஒழுங்கு செய்து ஞாயிற்றுக்கிழமை உண்ணாவிரதத்திலும் அதேபோல திங்கட்கிழமை நடைபெறும் நினைவேந்தல்களிலும் பங்குபற்றி மக்கள் எழுச்சியை காட்ட வேண்டும்.

அனைத்து அமைப்புகளையும் இதற்கு ஒழுங்கு செய்யுமாறு நாங்கள் அன்புரிமையோடு கேட்டுக் கொள்கிறோம். - என்றார்.

ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம், "தமிழ் மக்களுடைய ஒட்டுமொத்தமான அபிலாசைகளை ஒன்றிணைந்து ஒரே குடும்பமாக நிறைவேற்ற வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த பொதுக் கட்டமைப்பு செயல்பட்டு வருகிறது. ஆகவே இந்த பொதுக்கட்டமைப்பின் நிகழ்ச்சிநிரலுக்கு பூரண ஒத்துழைப்பை பொதுமக்கள் வழங்க வேண்டும் , எனக் குறிப்பிட்டார்.

## தூதர் மிலிந்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு நிலை தொடர்பான விரிவான மதிப்பாய்வை மையப்படுத்தியதாக இந்தச் சந்திப்பு நேற்று இடம்பெற்றதாக இலங்கை உயர்ஸ்தானிகராலயம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் எதிர்கால ஒத்துழைப்புக்கான விடயங்கள் தொடர்பிலும் விவாதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விக்ரம் மிஸ்ரி மற்றும் இலங்கையின் பிரதி உயர்ஸ்தானிகர் நிலுகா கதுருகமுவ ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி
இலக்கம் -
076 443 8622
kalaikkathiradvt@gmail.com






# அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயதை 60 ஆக மாற்றியமையால் 249 விசேட வைத்தியர் ஓய்வு!



## உண்மையை ஒப்புக்கொண்டார் கெஹெலிய

அரச ஊழியர்களின் ஓய்வூதிய வயதை 60 ஆக மாற்றியமையால் 9 வீதமான விசேட வைத்தியர்கள் இந்த வருட இறுதிக்குள் ஓய்வு பெறவுள்ளனர் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ விசேட வைத்தியர்கள் குழுவொன்று ஒரேயடியாக ஓய்வுபெறுவதால் சுகாதாரத்துறையின் முகாமைத்துவம் மற்றும் சேவைகளை வழங்குவதில் சிக்கல் நிலை உருவாகலாம் எனக் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் இது இளம் மருத்துவர்களுக்கு சாதகமான பின்னணியை உருவாக்கும் எனக் குறிப்பிட்டார். இதன்போது மேலும் உரையாற்றிய சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல –

இலங்கையின் வைத்தியசாலை அமைப்பில் தற்போது 2,278 விசேட வைத்தியர்கள் கடமையாற்றி வருகின்றமையுடன் கட்டாய ஓய்வுபெறும் வயது 60 என்பதால் விசேட அதிகாரிகள் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள் பின்வருமாறு ஓய்வுபெற உள்ளனர்.

அதன்படி 222 சிறப்பு மருத்துவ அதிகாரிகள் மற்றும் 27 நிர்வாக மருத்துவ அலுவலர்கள் என மொத்தம் 249 பேர் இந்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெறவுள்ளனர்.

ஒரு சதவீதமாக சிறப்பு மருத்துவ அதிகாரிகளின் எண்ணிக்கையில் சுமார் 9 வீதமான பேர் ஓய்வு பெறப் போகிறார்கள். எனவே காலியாக உள்ள மருத்துவமனைகள் மற்றும் நிறுவனங்களின் பாடப் பகுதிக்கு ஏற்ப உள் இடமாற்ற முறையை சமநிலைப்படுத்துவது சாத்தியமாகும்.

கூடுதலாக 5 வருட வெளிநாட்டு விடுப்பு முறையின் கீழ்இ மேலும் 3வீத வைத்தியர்கள் வெளிநாடு செல்ல முடியும். அதே எண்ணிக்கை பொது மருத்துவ பதவிகளை உள்ளடக்கிய அமைப்பின் கீழ் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயிற்சிக்காக அரசாங்கம் வருடத்திற்கு நிறையப் பணத்தைச் செலவிடுகிறது. மேலும் பயிற்சி பெறும் அதிகாரிகள் கட்டாய சேவைக் காலத்திற்கு உட்பட்டுள்ளனர்.

எனவே ஓய்வுபெறும் வயதை 60 ஆக மாற்றியமை இத்துறையில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகத் தெரிகிறது. ஏனெனில் இது இளம் மருத்துவர்கள் தங்களுக்கு விருப்பமான பதவிகளைப் பெறவும் உள்நாட்டில் தகுதி வாய்ந்த மருத்துவர்கள் பதவி உயர்வு பெறவும் வாய்ப்பளிக்கிறது என மேலும் தெரிவித்துள்ளார்.

# மத்தள விமான நிலையத்துக்கு மாதம் 100 கோடி ரூபா நட்டம்!

## நிமல் சிறிபால டி சில்வா போட்டுடைத்தார்



மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்துக்கு மாதாந்தம் 10 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

வருங்கால முதலீட்டாளர் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் முதலீடு செய்யத் தயாராக இருந்தால் அரசாங்கம் பரிசீலிக்கும் என்று அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித் துள்ளார்.

எவ்வாறாயினும் கொரோனா தொற்று நோய் மற்றும் நாட்டில் பரவலான போராட்டங்கள் போன்ற பல காரணங்களால் விமானப் போக்குவரத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இரத்மலானை மற்றும் பலாலி விமான நிலையங்களும் திட்டமிட்டபடி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையத்தில் பல விமான நிறுவனங்கள் தமது சேவைகளை இயக்குவதாக உறுதியளித்த போதிலும் ஒரு விமானம் கூட அங்கு தரையிறங்கவில்லை என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

ஏர் இந்தியாவும் தங்கள் சேவைகளை இயக்க ஒப்புக்கொண்டதாகவும் ஆனால் அதன் வார்த்தையைக் காப்பாற்றத் தவறிவிட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மாலைதீவு விமான சேவை நிறுவனத்துடன் இரத்மலானை விமான நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்ட திட்டம் தோல்வியடைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஶ்ரீலங்கன் விமான சேவையும் இதுவரை 100 கோடியே 20 லட்சம் அமெரிக்க டொலர் நட்டத்தை பதிவு செய்துள்ளதாகவும் அதனை மறுசீரமைப்பதற்கான அமைச்சரவை பத்திரம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

49வீத பங்குகள் வருங்கால முதலீட்டாளருக்கு குத்தகைக்கு விடப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஶ்ரீலங்கனுக்கு சொந்தமாக எந்த விமானமும் இல்லை என்றும் கடற்படையில் உள்ள 23 விமானங்களும் குத்தகைக்கு விடப்பட்டவை என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஶ்ரீலங்கன் விமான சேவையை குத்தகைக்கு விடாவிட்டால் சுமார் 6 ஆயிரம் ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்க நேரிடும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# அரசாங்க ஊழியர்களின் ஆடை தொடர்பில் சுற்றுநிருபம்!

அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்கு கடமைக்காக வருகை தரும் போது அலுவலகத்திற்கு பொருத்தமான உடைகளை அணிவது தொடர்பில் புதிய சுற்றுநிருபம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான செயலாளர் பிரியந்த மாயாதுன்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பிலான சுற்றுநிருபத்தைத் தயாரிப்பதற்குரிய ஆலோசனை உரிய அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அரச ஊழியர்கள் அலுவலகங்களுக்கு கடமைக்காக வருகை தரும்போது பெண்கள் சேலையும் கர்ப்பிணி பெண்கள் அவர்களுக்கு பொருத்தமான உடையையும் அணிய வேண்டும் என சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆண்களுக்கு வெள்ளை நிற மேற்சட்டையும் கறுப்பு நிற காற்சட்டையையும் அலுவலக ஆடையாக பரிந்துரைக்கவும் சப்பாத்து அணிவதனை கட்டயாமாக்குவதற்கும் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன எனவும் பிரியந்த மாயாதுன்ன தெரிவித்துள்ளார்.

# இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும்

## அமெரிக்காவின் துணைச் செயலாளர் உத்தரவாதம்



இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என அமெரிக்காவின் துணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட் உறுதியளித்துள்ளார்.

தற்போது அமெரிக்கா சென்றுள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைபொருளாதார நெருக்கடியில் இருந்து மீள அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என்றும் சுதந்திரமான மற்றும் வளமான பிராந்தியத்துக்கு ஆதரவளிக்க ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றும் அமெரிக்காவின் துணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

# மன்னார் கடற்கரையைத் தூய்மையாக்கும் நடவடிக்கைகள் புதன்கிழமை முன்னெடுப்பு!

தேசிய கடல்சார் வளங்களை பாதுகாக்கும் வாரம் எனும் சர்வதேச கடற்கரை சுத்தப்படுத்தும் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையால் கடற்கரை சுத்தப்படுத்தும் நிகழ்வுகள் மன்னாரில் புதன்கிழமை இடம் பெற்றது.

அதற்கு அமைவாக மன்னார் சௌவுத்பார், கீரீ, தாழ்வுபாடு, நடுக்குடா போன்ற கடற்கரை பகுதிகளில் தூய்மையாக்கல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தநிகழ்வில் கடல்சார் சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், கிராம சேவகர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கடற்படையினர் மற்றும் மன்னார் நகரசபை, மன்னார் பிரதேச சபை, பொதுமக்கள் இணைந்து கடற்கரை சுத்திகரிப்பு நடவடிக்கையை மேற்கொண்டனர்.

# ரயில் திணைக்களத்தில் ஊழியர் பற்றாக்குறை!

ரயில் திணைக்களத்தில் ஊழியர்களுக்கு பற்றாக்குறை நிலவிவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் திணைக்களத்தின் பிரதி பொது முகாமையாளர் காமினி செனவிரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

சுமார் 7 ஆயிரம் ஊழியர்களுக்கு இவ்வாறு பற்றாக்குறை நிலவுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ரயில் ஊழியர்களின் பற்றாக்குறை காரணமாக ரயில் திணைக்களத்தின் நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.



# பாட்டும் நானே? .......

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும் 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில், தான் கைப்பற்றிய சில பகுதிகளை ரஷ்யாவுடன் இணைப்பது பற்றிய மக்களின் கருத்தை அறிய, அப்பகுதிகளில் ரஷ்யா தேர்தலை நடத்தப் போகிறதாம். தேர்தலின் முடிவு எதுவாயிருக்கும் என்பது தெரிந்ததுதான்.

இந்த நேரத்தில் ஏன் இந்தத் தேர்தல் என்று நினைப்பீர்கள்! காரணத்துடன்தான் ரஷ்யா இந்தக் காயை நகர்த்துகிறதாம். சாதகமான முடிவு வந்துவிட்டால், பிடிக்கப்பட்ட நிலப்பகுதிகள் மக்களின் விருப்பப்படி ரஷ்யாவின் பகுதிகள் ஆகிவிடுமாம். அதன் பிறகு, அப்பகுதிகளின்மேல், தொடுக்கப்படும் போரை ரஷ்யா தன் நாட்டின்மீது தொடுக்கப்படும் போராகவே எடுத்துக் கொள்ளும் என்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் தங்கள்மீது ஏவப்படும் ஆயுதங்களைக் கொடுத்த நாடுகளும், தங்கள் மீது போர் தொடுப்பதாகவே கருதி ரஷ்யா அந்நாடுகளின் மீதும் போர் தொடுக்கும் உரிமையையும் பெற்றுவிடுமாம். அதற்காகவே ரஷ்யா இத்தேர்தலை நடத்தப்போகிறது என்கிறார்கள்.

இதன் விளைவு உலகைப் பெரிய அளவில் பாதிக்கப் போகிறது. தேர்தலின் மூலம் தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்ளப்படப்போகும் பகுதிகளைப் பாதுகாப்பதற்கென பல்லாயிரம் பேர் கொண்ட படையஷ்ணியை அப் பகுதிகளுக்கு ரஷ்யா அனுப்பப் போகிறதாம்.

வெளியே காட்டிக்கொள்ளாவிட்டாலும் ரஷ்யாவின் எரிவாயுத்தடையினால், குளிர் காலத்தில் மிகச்சிரமப்பட்ட ஐரோப்பிய நாடுகளில் சில, ரஷ்யாவுக்கு நட்புக்கரம் நீட்ட வாய்ப்பிருப்பதாகவும் பேசிக் கொள்கிறார்கள். ரஷ்யா தோல்வியைச் சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், அணு ஆயுத யுத்தம் வரும் என்று 'புட்டின்' உறுதியாக வெளிப்படவே எச்சரித்திருக்கிறார். 2023 ஆம் ஆண்டு உலகத்திற்கு எப்படி விடியப்போகிறதோ தெரியவில்லை.

உலகநாதரின் ஒப்பீனியன் * 'சோதனை மேல் சோதனை போதுமடா சாமி'

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.09.2022இல் வெளியிடப்பெற்றது.